


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.8.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டின் கலாச்சார உறவுகளை மேம்படுத்தும் "வேர்களைத் தேடி" திட்டத்தின் கீழ், தென் ஆப்பிரிக்கா, உகாண்டா, குவாடலூப், மார்டினிக், பிஜி, இந்தோனேஷியா, மொரிஷியஸ், ஆஸ்திரேலியா, மாலத்தீவு, கனடா, மியான்மர், மலேசியா, இலங்கை. பிரான்சு மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த 100 அயலகத் தமிழ் இளைஞர்கள் 1.08.2024 அன்று முதல் 15.08.2024 வரையிலான தமிழக சுற்றுப் பயணத்திற்கு துணிமணிகள், பயண குறிப்புகள், புத்தகங்கள், அடையாள அட்டை போன்ற பயணத்திற்கான பொருட்களை வழங்கி தொடங்கி வைத்து, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். உடன் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ் மஸ்தான், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வளர்ச்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொது மற்றும் மறுவாழ்வுத்துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரிஷ் தக்கர், பொது மற்றும் மறுவாழ்வுத் துறை இணைச் செயலாளர் பா.விஷ்ணு சந்திரன், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் பா. கிருஷ்ணமூர்த்தி, உலக தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கல்வி பொறுப்பாளர் ராஜமாணிக்கம் ஆகியோர் உள்ளனர்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு!

புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த க.செ.மணிமாறன், மு.க.திருமுருகன் ஆகியோர், தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 31.07.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

அருந்ததியர் சமுதாயத்திற்கான 3% உள் ஒதுக்கீட்டை அங்கீகரித்து உச்சநீதிமன்றம் தீர்ப்பு!

# ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக விடுதலைக்கான சமூக நீதியை நிலைநாட்டும் - நமது 'திராவிட மாடல்' பயணத்துக்கான மற்றுமோர் அங்கீகாரம்!

## வலைதளப் பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் மகிழ்ச்சி!

**சென்னை, ஆக. 2-**

**அருந்ததியர் சமுதாயத்திற்கான 3% உள்ஒதுக்கீட்டை அங்கீகரித்து உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு அமைந்திருப்பது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்த சமூக வலைதளப் பதிவில், "சமூக நீதியை நிலைநாட்டும் நமது 'திராவிட மாடல்' பயணத்துக்கான மற்றுமோர் அங்கீகாரம்!" என்று மகிழ்ச்சி ததும்பக் குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக விடுதலைக்கான சமூக நீதியை நிலைநாட்டும் நமது திராவிட மாடல் பயணத்துக்கான மற்றுமோர் அங்கீகாரமாக இன்றைய உச்சநீதிமன்றத் தீர்ப்பு அமைந்திருக்கிறது!

முறையாகக் குழு அமைத்து, அதன்மூலம் திரட்டப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு அருந்ததியர் சமுதாயத்திற்கான 3% உள்ஒதுக்கீட்டைத் தலைவர் கலைஞர் கொடுக்க அதற்கான சட்ட முன்வடிவைப் பேரவையில் நான் அறிமுகம் செய்து, நிறைவேற்றித் தந்தோம்.

இந்தச் சட்டத்தை உச்சநீதி மன்றத்தின் ஏழு நீதிபதிகள் கொண்ட அமர்வு உறுதிசெய்திருப்பது பெருமகிழ்ச்சியளிக்கிறது.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# குமரி அனந்தனுக்கு 'தகைசால் தமிழர்' விருது!

## சுதந்திர தின விழாவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்குகிறார்!

சென்னை, ஆக. 2 -

தகைசால் தமிழர் விருதிற்கு குமரி அனந்தன் அவர்கள் தேர்வு - சுதந்திர தின விழாக் கொண்டாட்டத்தின்போது தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் வழங்கப்படும் என அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.



தமிழ்நாட்டிற்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில், தகைசால் தமிழர் என்ற விருதை உருவாக்கவும், இந்த விருதிற்கான விருதாளரைத் தேர்வு செய்திட ஒரு குழுவை அமைத்திடவும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 2021ல் ஆணையிட்டிருந்தார்கள்.

இந்த விருதினை கடந்த 3 ஆண்டுகளில் சங்கரைய்யா அவர்கள், ஆர். நல்லகண்ணு மற்றும் ஆசிரியர் கி.வீரமணி ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்விருதிற்கான நடப்பாண்டு விருதாளரைத் தேர்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட குழுவின் கலந்தாலோசனைக் கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நேற்று (1.8.2024) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இளம் வயதிலேயே பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, சட்ட மன்ற உறுப்பினராகவும் நாடாளு மன்ற உறுப்பினராகவும் காந்தி ஃபோரம் அமைப்பின் தலைவரும் இலக்கியச் செல்வராகவும், இலக்கியக் கடலாகவும், எவரோடும் பகை கொள்ளாத பண்பாட்டுச் செம்மலாகவும் விளங்கும் குமரி அனந்தன் அவர்களை பெருமைப்படுத்தும் வகையில் இவ்வாண்டிற்கான தகைசால் தமிழர் விருதுக்கு அவரது பெயர் பரிசீலிக்கப்பட்டு அவருக்கு இவ்விருதினை வழங்க முடிவு செய்யப்பட்டது.

'தகைசால் தமிழர் விருது'க்கு தேர்ந்தெடுக்கப்பட்ட குமரி அனந்தன் அவர்களுக்கு, பத்து இலட்சம் ரூபாய்க்கான காசோலையும் பாராட்டுச் சான்றிதழும் வருகிற ஆகஸ்ட் திங்கள் 15ஆம் நாள் நடைபெறும் சுதந்திர தின விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் வழங்கப்படும்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பின்படி

# கேரள முதல்வரிடம் ரூ. 5 கோடி நிதி!

## திருவனந்தபுரத்தில் - அமைச்சர் எ.வ. வேலு நேரில் வழங்கினார்!

**சென்னை, ஆக.2–**

**நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட கேரளா மாநிலத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்த ரூ.5 கோடிக்கான காசோலையை கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களை நேரில் சந்தித்து பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார்.**

**கேரள மாநிலம், வயநாடு மாவட்டத்தில் நிலச்சரிவினால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களைநேற்று முன்தினம் தொலைபேசியில் தொடர்புகொண்டு தம்முடைய ஆழ்ந்த வருந்தங்களையும் இரங்கலையும் தெரிவித்ததுடன், தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தருவதாக உறுதியளித்திருந்தார். அதன்படி, தமிழ்நாட்டிலிருந்து இரண்டு இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகளின் தலைமையில் மீட்புக் குழு மற்றும் மருத்துவக் குழுவினரை கேரள மாநிலம் வயநாடு மாவட்டத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு அங்கு தேவையான மீட்பு மற்றும் மருத்துவப் பணிகளில் ஈடுபட்டுவருகின்றனர்.**

**நிவாரணப் பணிகளுக்கென கேரள அரசுக்கு தமிழ்நாடு அரசின் சார்பாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஐந்து கோடி ரூபாய் வழங்குவதாக தமிழ்நாடு முதலமைச்சர் 30.7.2024 அன்று அறிவித்திருந்தார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களை திருவனந்தபுரத்தில் நேற்று முன்தினம் (31.7.2024) நேரில் சந்தித்து ரூ.5 கோடிக்கான காசோலையை அவரிடம் அளித்தார்.**

# தேவகோட்டை அ.ம.மு.க. இளைஞரணி நிர்வாகி உட்பட 25 பேர் கழகத்தில் சேர்ந்தனர்!

## அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் முன்னிலை! பெரி.பாலா ஏற்பாடு!

*சிவகங்கை, ஆக.2 -*

*சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை நகர அ.ம.மு.க. இளைஞரணி அமைப்பாளர் கபில் ராஜா தலைமையில் காஜா முஹம்மது உட்பட 25 பேர் அக்கட்சியில் இருந்து விலகி சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் முன்னிலையில் கழகத்தில் இணைந்தார்கள்.*

*அனைவருக்கும் அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் கைத்தறி துண்டு அணிவித்து வரவேற்றார்.*

*இந்த நிகழ்ச்சியில் நகரக் கழகச் செயலாளர்கள் பெரி. பாலா, என்.குணசேகரன், சாக்கோட்டை மேற்கு ஒன்றியச் செயலாளர் கே.ஆர். ஆனந்த், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், நிர்வாகிகள் சன் சீமான் சுப்பையா, காளி முத்து,ருக்மா சரவணன் சிதம்பரம் ஜெபத்துரை, இளைஞரணி மோகன்ராஜ், சேவியர் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.*

நிதித்துறை கட்டுப்பாட்டில் உள்ள தணிக்கைத் துறைகளுக்குத் தேர்வான

# 780 தணிக்கையாளர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஆக.2-

நிதித்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள தணிக்கைத் துறைகளுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 780 தணிக்கையாளர் பணியிடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.8.2024) தலைமைச் செயலகத்தில், நிதித்துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் தணிக்கைத்துறைகளில் கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர், இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர், உதவி ஆய்வாளர் மற்றும் உதவி தணிக்கை ஆய்வாளர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட 780 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கிடும் அடையாளமாக 20 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

நிதித்துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் கூட்டுறவு தணிக்கைத் துறையில் 7 கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர் பணியிடங்களும், 928 இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர் பணியிடங்களில் முதற்கட்டமாக 700 இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர் பணியிடங்களும், உள்ளாட்சி நிதி தணிக்கை துறையில் 43 உதவி ஆய்வாளர்கள் பணியிடங்களும் மற்றும் இந்து சமய அறநிலைய நிறுவனங்களின் தணிக்கைத் துறையில் 30 உதவி தணிக்கை ஆய்வாளர் பணியிடங்களும் என மொத்தம் 780 பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

இளநிலை கூட்டுறவுத் தணிக்கையாளரின் முக்கிய பணி, தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி உள்ளிட்ட அனைத்து கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகளை தணிக்கை செய்தல், வரவினமாக உள்ள கடன், அசல், வட்டி போன்ற இனங்கள் உரிய முறையில் வரவு வைக்கப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்வதாகவும்.

இந்து சமய அறநிலைய நிறுவனங்களின் தணிக்கை ஆய்வாளர் பணியானது, இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அறநிலைய நிறுவனங்களின் பொது கணக்கு, அன்னதான கணக்கு, திருப்பணி மற்றும் இதர வரவுசெலவு கணக்குகள் மீது தணிக்கை மேற்கொண்டு இந்து சமய அறநிலைய சட்ட விதிகளுக்குட்பட்டு வரவுசெலவுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை உறுதி செய்வதாகும்.

உள்ளாட்சி நிதி தணிக்கை துறையின் உதவி ஆய்வாளர் பணியானது, உள்ளாட்சி நிறுவனங்களின் கணக்குகளைச் சரிபார்த்தல், வரவு செலவுகள் முறையாக உள்ளனவா என்பதையும், வரவு செலவுகள் சம்பந்தப்பட்ட சட்டத்திற்குட்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவா என்பதையும் உறுதி செய்தல், அரசு மற்றும் பிற நிதி உதவி அளிக்கும் நிறுவனங்கள் வழங்கும் நிதி வழங்கப்பட்ட காரணங்களுக்காக முறையாக பயன்படுத்தப்படுகிறதா என்பதை ஆய்வு செய்வதாகும்.

புதிதாக நியமனம் பெற்றுள்ள தணிக்கையாளர்களுக்கு சென்னை, மதுரை, கோவை, தஞ்சாவூர் மற்றும் தூத்துக்குடியில் தேர்ந்தெடுக்கப்பட்ட மையங்களில் தணிக்கைப்பணி தொடர்பான முழுமையான பயிற்சி வழங்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், நிதித்துறை செயலர் (செலவினம்)

எஸ். நாகராஜன், தலைமை தணிக்கை இயக்குநர் ஜி.கே.அருண் சுந்தர் தயாளன், கூட்டுறவு தணிக்கைத்துறை இயக்குநர் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வடலூரில் ஈட்டி எறிதல் பயிற்சியின் போது உயிரிழந்த

# மாணவன் குடும்பத்திற்கு ரூ.3 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஆக.2-

கடலூர் மாவட்டம், வடலூரிலுள்ள தனியார் பள்ளியில் நடைபெற்ற ஈட்டியெறிதல் பயிற்சியின் போது உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், பார்வதிபுரம் கிராமத்தைச் சேர்ந்த செல்வன். கிஷோர் (வயது 15) த/பெ. திருமுருகன் என்பவர் வடலூரிலுள்ள தனியார் பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த நிலையில் 24.07.2024 அன்று பள்ளி மைதானத்தில் நடைபெற்ற ஈட்டியெறிதல் பயிற்சியின்போது எதிர்பாராதவிதமாக சிறுவன் கிஷோரின் தலையில் ஈட்டி பாய்ந்ததால் பலத்த காய மடைந்த நிலையில் புதுச்சேரி மற்றும் சென்னையிலுள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை மேற்கொண்டு, பின்னர் 30.07.2024 அன்று முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும் இச்சம்பவத்தில் உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்ச ரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

சென்னை – கலைஞர் நகர் இ.எஸ்.ஐ. மருத்துவமனையில்

# படுக்கைகளின் எண்ணிக்கையை 1200 ஆக உயர்த்த வேண்டும்!

## மாநிலங்களவையில் டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஆக. 2 –

சென்னை கே.கே. நகரில் உள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி. டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு வலியுறுத்தினார்.

மாநிலங்களவையில் சிறப்பு கவன ஈர்ப்பின் மூலம் டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேசியதாவது:–

சென்னை கே.கே. நகரில் உள்ள இ.எஸ்.ஐ. மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சென்னை நகரில் உள்ள பல லட்சக்கணக்கான மக்களுக்கு மருத்துவ சேவை அளித்து வரும் முக்கியமான மருத்துவமனை ஆகும். 250 படுக்கைகளுடன் 1979ஆம் வருடம் தொடங்கப்பட்ட இந்த மருத்



துவமனை 1991 வரை தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் இருந்தது.

தென்னிந்தியாவில் தொழில் முறை நோய்களுக்கான சிறப்பு மருத்துவமனை ஒன்று வேண்டும் என்பதால் இந்த மருத்துவமனையை டெல்லியை தலைமை இடமாகக் கொண்ட மாநில காப்பீட்டுக் கழகம் 1991ம் வருடம் கையகப்படுத்தி இப்போது வரை நடத்தி வருகிறது.

தற்போது நேரடியாகவும் சென்னையின் பிற பகுதிகளில் உள்ள பதினைந்துக்கும் மேற்பட்ட இ.எஸ்.ஐ. மருந்தகங்கள் மூலமாகவும் தினசரி பல்லாயிரக்கணக்கான நோயாளிகளுக்கு பல்நோக்கு சிகிச்சை அளிக்கும் மையமாகத் திகழ்கிறது. இதன் மூலம் மருத்துவக் காப்பீடு செய்து கொண்ட சுமார் ஐந்து லட்சம் பேர் பயனடைகிறார்கள்.

இதுதவிர, சென்னை நகரில் நாளுக்கு நாள் அமைப்புசாரா தொழிலாளர்கள் மற்றும் பிற தொழிலாளர்கள் எண்ணிக்கை கூடிக்கொண்டே வருகிறது. அவர்களுக்கு தரமான சிகிச்சை அளிக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே பல்வேறு துறைகளில் கூடுதல் மருத்துவ நிபுணர்களை நியமிக்க வேண்டும். மருத்துவம் சாராத ஊழியர்களையும் போதுமான அளவுக்கு நியமித்து அடுத்த கட்டத்துக்கு இந்த மருத்துவமனையை நகர்த்த வேண்டிய நேரம் வந்துவிட்டது.

இதன் இன்னொரு முக்கிய கட்டமாக இம்மருத்துவமனையின் படுக்கைகளின் எண்ணிக்கையை 1200 ஆக உயர்த்தி, இதய சிகிச்சைக்கும் புற்று நோய் சிகிச்சைக்கும் தனியாக பிரிவுகளை நவீன மயமாக உருவாக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்துகிறேன். இதன் மூலம் சென்னை மண்டலத்தில் உள்ள பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்புடன் கூடிய சுகாதார வசதி பெறுவதை மத்திய அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேசினார்.